தமிழகச் சட்டப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1967 ஜூன் 23.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில், மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. ப. ஆதித்தனார் அவர்கள் தலைமையில், பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : இப் பேரவைக் கூட்டத்தின் முதல் அலுவல் "வினாக்கள்—விடைகள்". மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் பதில் அளிப்பார்கள்.

Madras-Pallipet Express bus.

* 47 Q.—THIRU K. VINAYAKAM : Will the hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to run express bus service between Madras and Pallipet (Chingleput district) via Tiruttani and Ramakrishnarajupet?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தமிழக அரசு இரு மாநிலங்களுக்கிடையில் கீழ்க்காணும் இரு பஸ் வழித்தடங்களில் போக்குவரத்துத் துறையின் சாதாரண பஸ்களை விடுவது குறித்து ஆலோசித்து வருகிறது.

(1) சென்னை-பள்ளிப்பட்டு :

வழி : பரங்கிமலை, பூவிருந்தவல்லி, திருவள்ளூர், திருத்தணி, ராமகிருஷ்ணராஜுபேட்டை (79.4 மைல்).

(2) சென்னை-பள்ளிப்பட்டு :

வழி : அமைந்தகரை, பூவிருந்தவல்லி, திருவள்ளூர், திருத்தணி, நகரி (74.4 மைல்).

திரு. கே. வினயகம் : முதலில் கூறிய ரூட் பூராவும் நம்முடைய மாகாணத்திலே போவதினாலே இந்த ரூட்டில் பஸ் விடுவதற்கு எந்த விதமான தடங்கலும் இருக்காது என்று நினைக்கிறேன். இரண்டாவது ரூட் ஆந்திர பிரதேசத்தை ஒட்டி அதைத் தொட்டுக் கொண்டு போகவேண்டும். சென்னையிலிருந்து பூந்தமல்லி, திருவள்ளூர், திருத்தணி, ராமகிருஷ்ணராஜுபேட்டை வழியாகப் பள்ளிப்பட்டுக்கு உடனடியாக ஒரு எக்ஸ்பிரஸ் பஸ் விடுவதற்கு அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : விரைவு பேருந்து வண்டி போடுவது பற்றி யோசிக்கப்பட்டது. இயக்குநர் இது சம்பந்தமாக ஆராய்ந்து பார்த்து விரைவு வண்டியாக இருந்தால் 35 இடங்கள்

தான் போடவேண்டியிருக்கும். அப்படி போட்டால் அது லாப கரமாக இருக்காது என்ற காரணத்தால் சாதாரா வண்டியாக, அதாவது 60 இடங்கள் உள்ள வண்டியாகப் போடுவதற்கு யோசிக் கப்படுகிறது. இதைப்பற்றி கவனிக்கப்படும்.

திரு. ந. தருமலிங்கம் : திருத்துறைப்பூண்டியிலிருந்து திருச் சிக்கும், திருத்துறைப்பூண்டியிலிருந்து சென்னைக்குகூட தமிழகச் சர்க்கார் பேருந்து விடவேண்டுமென்று யோசனை இருக்கிறதா? இதைப்பற்றி அங்கேயிருந்து ஏதாவது விண்ணப்பம் வந்திருக் கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லாவிட்டாலும் அங்கத்தினருடைய யோசனை கவனிக் கப்படும்.

திரு. ஆ. கோவிந்தராசன் : நெல்லிக்குப்பம் முனிசிபாலிடி யாகவும் தொழில் நிறைந்த இடமாகவும் இருப்பதால் சென்னை யிலிருந்து இராமனுதபுரத்திற்கும், இராமனுதபுரத்திலிருந்து சென்னைக்கும் நெல்லிக்குப்பம் வழியாகத் தங்கி செல்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பரிசீலிக்கப்படும்.

திரு. கே. விநயகம் : பள்ளிப்பட்டு நம்முடைய மாகாணத்தின் கோடியில் இருக்கிறது. அதற்கப்புறம் இரண்டு பர்லாங்க் தூரத்தில் ஆந்திர பிரதேசம் ஆரம்பிக்கிறது. அங்கிருந்து பள்ளிப் பட்டுக்கோ அல்லது பள்ளிப்பட்டிலிருந்து சென்னைக்கோ வர வேணடுமென்றால் ஒரே அடியாக நேராக வரமுடியாமல் இரண்டு மூன்று இடங்களில் ஏறவேண்டி இருக்கிறது. அதனால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். பொதுமக்களுக்காக பஸ் விடுவதால் அதில் லாபமோ நஷ்டமோ ஏற்படுவதுபற்றி கவனிக் காமல் பஸ் விடவேண்டும். ஏனென்றால் இப்போதுள்ள அரசாங்கம் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டாலும்கூட அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. ஆகையால், மக்களுடைய வசதிக்காக நஷ்டம் வந்தாலும் பள்ளிப்பட்டிலிருந்து சென்னைக்கு நேரடியாக பஸ் விட அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இரண்டு வழிகளைப்பற்றி அரசாங்கம் யோசித்துக்கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டேன். இப்பொழுது அங்கத்தினர் சொன்ன பாதையை மாத்திரம் விரை விலே கவனிக்க பரிசீலிக்கப்படும்.

திரு. ஆ. கோவிந்தராசன் : மதுரையிலிருந்து கிருஷ்ணகிரி வரையிலும் செல்லுகின்ற பஸ்ஸை மதுரையிலிருந்து சென்னைக்கு விடுவதற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதற்கு தனிக்கேள்வி வேண்டும்.

1967 ஜூன் 23]

திரு. நா. காசிராமன் : கும்பகோணத்திலிருந்து பண்ருட்டி வழியாக சென்னைக்கு பஸ் விட்டால் தூரமும் குறையும், கட்டணமும் குறையும். ஆகையால் அந்த வழியாக பஸ் விடுவதற்கு யோசிப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தனிக்கேள்வி போடவும்.

அரசாங்க பஸ்கள் விற்பனை

*48 வினா.—**திரு. ஆ. கு. சுப்பையா :** மதிப்புக்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்கத்திற்குச் சொந்தமான பஸ்கள் சமீபத்தில் விற்பனைச் செய்யப்பட்டனவா?

(இ) ஆம் எனில், எத்தனை பஸ்கள், எவ்வளவு ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) 1967-ம் ஆண்டு மார்ச் திங்களில் 36 பஸ்கள் ரூ. 3,84,872-க்கு விற்கப்பட்டன.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, இந்த பஸ்களை விற்பனை செய்கின்ற காலத்தில் டெண்டர் கால்பார் செய்து விற்பனை செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவைகளெல்லாம் ஏலத்தில் விடப்படுகின்றன. வண்டியினுடைய விலையை நிர்ணயித்து அதற்குமேலே அதிகமாக ஏலம் கேட்பவர்களுக்கு விற்கப்படுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பஸ்களை விற்பனை செய்வதற்கு உரியவை என்று தீர்மானிப்பதற்குத் தனி அதிகாரி இருக்கிறாரா அல்லது ஏதாவது குழு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்போது தனி அதிகாரிதான் கவனித்துக்கொண்டிருக்கிறார்.

திரு. க. ந. இராமச்சந்திரன் : இப்போதும் அரசாங்க பஸ்களை விற்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதா ? ஏற்கனவே விற்பனையான பஸ்கள் விலை எவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவசியம் ஏற்படும்போது பஸ்கள் பழுதாகிவிட்டால் அவைகள் ஏலத்திற்கு விடப்படுகின்றன.